
www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# லி



தாங்கள் செய்வது இன்னதென்று அறியாமல்....



ஞானம் 07 – ஒலி 05 – 04.02.2024

# ஆசிரியர் பக்கம்



அருட்பணி.இ.சைமன் பீட்டர்

அன்பான எனதருமை ஞான ஒலி இணைய இதழின் பெருமை மிகுவாசகப் பெருமக்களே, உங்கள் அனைவருக்கும் நம் அருள்நாதர் இயேசு கிறிஸ்துவின் அற்புத நாமத்தில் என் பணிவான நல்வாழ்த்துக்களையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். உங்களின் பேராதரவிற்கும், நீங்கள் தரும் தொடர் உற்சாகத்திற்கும் நாங்கள் மிகவும் நன்றிக் கடன்பட்டிருக்கின்றோம். வாசிப்பில் நீங்கள் விரும்பும் உன்னதமான கருத்துக்களைத் தேடித்தேடி உங்களின் பார்வைக்குப் படைக்க நாங்கள் அதிக கவனம் எடுத்துக் கொள்கின்றோம். ஏனெனில் உங்களின் உயர்ந்த ஆளுமையை மிகவும் மதிக்கின்றோம். எங்களின் பணிகள் சிறக்கவும் உங்களின் அனுதின செபத்தில் எங்களுக்காக வேண்டிக்கொள்ள வேண்டுகின்றோம். நன்றி.

மரம் சும்மா இருக்க விரும்பினாலும், காற்று அதைச் சும்மா இருக்க விடுவதில்லை என்று சொல்வார்கள். மரத்திற்கு வேறு வழியே இல்லை, காற்றிலிருந்து தனக்குத் தேவையான கார்பன் டை ஆக்ஸைடை எடுத்துக்கொண்டு அதற்கு நன்றியாக ஆக்ஜிஸனை வழங்குகிறது. உலகமெங்கும் காற்று அதனை எடுத்துச் சென்று அனைத்து உயிர்களுக்கும் கொடுத்து அவைகளை வாழ வைக்கிறது. இத்தகைய கூட்டணியில் கொடுக்கலும், வாங்கலும் இருக்கின்றது. அது உயிர்கள் வாழ்வதற்கான அவைகளின் இயக்கம். ஆனால் அதே வேளையில், காற்று புயலாக வருகின்றபோது. அவை மரங்களை அடியோடு சாய்ப்பதும், முறிப்பதும் தவிர்க்க முடியாத இயக்க நியதியாகவும் இருக்கின்றது. இதுதான் இயற்கையில் நடக்கும் வினோதங்கள்.

அதேபோல, மனித சமூகம் ஒவ்வொரு மனிதனுக்கும் பேருதவியாக இருப்பதுபோல, சக உயிர்களை சிதைக்கவும், சின்னாபின்னமாக்கவும் செய்கின்றது. மனிதன் மனித குலத்தோடு வாழும்போதுதான், அது அவனுக்குப் பாதுகாப்பும், நிம்மதியும், மகிழ்ச்சியும் தரும் குடும்பமாகவும் இருக்கின்றது. ஆனால் அதேவேளையில், மனிதனின் மனவேதனைக்கும், நிம்மதியற்ற நிலைக்கும், ஏன் விரக்திக்கும் அதுவே காரணமாகின்றது.

புயலிலும், மழையிலும், பனியிலும், கடும் வெயிலிலும், வறட்சியிலும், சிதைப்பிலுமிருந்தும் தன்னைக் காத்துக்கொண்டு தொடர்ந்து வளர்கின்ற, வாழ்கின்ற மரத்தைப்போல, சந்தோஷத்திற்கும், அதேவேளையில் வீழ்ச்சிக்கும், துயரத்திற்கும் காரணமாயிருக்கின்ற இந்த சமூகத்தில்தான் ஒரு மனிதன் வாழ்ந்தாக வேண்டும். அதாவது வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அந்தப் போராட்ட குணம்தான் ஓர் உயிர், இந்த உலகத்தில் வாழ்வதற்கானத் தகுதியை அளிக்கின்றது. அது இல்லை என்றால், எந்த உயிரும் நடைப்பிணமாகத்தான் அலைய வேண்டிவரும். அது அடிபட்டு, உதைபட்டு, தன்னைத் சூழலுக்கேற்றபடி தகவமைத்துக் கொள்ளும்வரை, இந்த

தாக்குதல் தொடரும்.

ஒரு முறை ஒரு ஜென் துறவி ஓர் ஊருக்குள் வந்தார். அது மாலை நேரம். அந்த வீது வெறிச்சோடிக் கிடந்தது. அனைவரும் தம்தம் வீடுகளுக்குள் டிவி பார்த்துக்கொண்டும், தங்கள் வேலைகளில் மும்முரமாக இருந்தார்கள். அப்போது அந்தத் துறவி, வீதியின் நடுவில் நின்றுகொண்டு, ஐயோ, வீடுகளெல்லாம் பற்றி எரிகின்றதே...அனைத்து வீடுகளும் கொழுந்துவிட்டு பற்றி எரிகின்றதே,மக்களெல்லாம் தீயினால் பற்றி எரிகின்றார்களே, அனைத்தும் சாம்பலாகிக் கொண்டிருக்கின்றதே என்று கூப்பாடு போட்டுக்கொண்டே இருந்தார்.

அந்தக் அவலக் குரலைக் கேட்ட அனைவரும், வீதிக்கு ஓடு வந்தார்கள். தங்கள் வீடுகளும், அந்த வீதியில் இருந்த எந்த வீடும் பற்றி எரியவில்லை என்பதை அறிந்து ஆச்சரியப்பட்டார்கள். ஆனால், அதைவிட, அந்தத் துறவி ஏன் இப்படி நடக்காத ஒன்றைப்பற்றி இப்படிக் கத்திக் கொண்டிருக்கின்றார் என்பதைப் பார்த்ததும், அதிர்ச்சியும், சிரிப்பும்தான் வந்தது.

இருந்தாலும், அவர்கள் அந்தத் துறவியிடம் சென்று, ஐயா, இங்கு எந்த வீடும் தீயினால் பற்றி எரியவில்லையே, பிறகு ஏன் இப்படி சத்தம் போட்டு எங்கள் அனைவரையும் கலக்கத்தில் ஆழ்த்தினீர்கள், ஏன் இப்படித் தொந்தரவு செய்கின்றீர்கள். உங்களுக்கு என்ன வேண்டும்?

அதற்கு அந்தத் துறவி, நான் வீடுகளெல்லாம் தீப்பற்றி எரிகின்றது என்ற என் சத்தத்தைக் கேட்டவுடன், எதைப்பற்றியும் யோசிக்காமல், அதை உடனே நம்பி, வெளியே ஓடி வந்தீர்கள், வந்து, சுற்றிலும் ஆர்வமாய்ப் பாத்துத்தான், அப்படி எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை என்று அறிந்து கொண்டீர்கள். ஆனால், நடக்காத ஒன்றை நான் சொன்னதும், யோசிக்காமல், ஆராயாமல் நம்பினீர்கள். அதேபோன்று நீங்களே, தீர யோசித்து, ஆராய்ந்து பார்த்த பிறகு, அது பொய் என்று உணர்ந்து, நிதானம் அடைந்தீர்கள், உண்மையான தெளிவு பெற்றீர்கள்.

அதுபோல, நீங்கள் அனைவரும் உங்களுக்குள் அடைந்து இருக்கின்றீர்கள், நீங்களே ஓர் கற்பனை உலகத்தை உங்களுக்குள் உருவாக்கிக்கொண்டு, நிஜத்தில் நடக்காத, உண்மையற்ற பல கவலைகளிலும், சண்டை சச்சரவுகளையும், பகையையும் உருவாக்கிக்கொண்டு, பற்பலக் கவலைகளினால், உங்களை நீங்களே எரித்துக் கொண்டிருக்கின்றீர்களே. நீங்கள் நினைப்பதுதான் உண்மை என்று உணர்ந்து கொண்டு..அந்தக் கவலைகளிலும், உங்களின் பகைவர்களோடு உங்களுக்குள் சண்டையிட்டும், வாக்குவாதங்கள் செய்து கொண்டும், பழிக்குப்பழி செய்யும் திட்டங்களை உருவாக்கிக் கொண்டும், இரவும் பகலும் உங்களின் உடலையும், மனதையும் எரித்து கொண்டு இருக்கின்றீர்களே... முதலில் நீங்கள் உருவாக்கியுள்ள, பொய்யான உலகத்திலிருந்து வெளியே வாருங்கள். இந்த உலகம் உங்களின் உலகத்தைவிட மிகப்பெரியது, அதிசயமானது, நமது மகிழ்ச்சிகான செல்வங்கள் கொட்டிக் கிடக்கின்றது. அவற்றை அனுபவியுங்கள். பாடும் பறவைகளில், காற்றில், இயற்கையில், உயிரினங்களின் அன்பில் நமக்கான மகிழ்வும், சந்தோஷமும், வெற்றிகளும் குவிந்து கிடக்கின்றன. நீங்கள் அனைவரும் தனியாக வாழ்வதற்காகப் படைக்கப்படவில்லை. பிற உயிர்களோடுதான் வாழ்வு, அவற்றோடுதான் உயர்வு, அவைகளால்தான் நமது வெற்றி.

டிவியும், அலைபேசியும் நவீன அடிமைகளின் எஜமானர்கள். புத்தியுள்ளவர், விழித்தவர் அவற்றைத் தனக்கு வேலையாளாகவும், அடிமையாகவும் வைத்திருப்பார்கள்.



# விவிலியம் அறிவோம்




## ஆசிகளும் சாபங்களும்

விளக்கம் – 126

இணைச்சட்டஆசிரியர்கள் இஸ்ரயேல் மக்களுக்கும் யஸவே கடவுளுக்கும் இடையில் இருந்த உறவை வெளிப்படுத்துவதற்கு உடன்படிக்கையை ஓர் உருவகமாகப் பயன்படுத்தினார்கள் என பெரும்பாலான விவிலிய அறிஞர்கள் கருதுகிறார்கள். ஒரு சில அறிஞர்களின் பார்வையில் இணைச்சட்டம் நூல் ஓர் உடன்படிக்கை ஆவணமாக உள்ளது. பண்டைய மேற்காசிய நாடுகளில் பின்பற்றப்பட்ட உடன்படிக்கை ஆவணங்களின் கட்டமைப்பு இணைச்சட்டம் நூலிலும் காணப்படுவதாக அவர்கள் கருதுகிறார்கள். உடன்படிக்கை ஆவணங்களின் கட்டமைப்பு முழுமையாகத் தெரியவில்லை என்றாலும் உடன்படிக்கை ஆவணங்களில் வருகின்ற பல கூறுகளைக் கொண்டதாக இணைச்சட்டம் நூல் உள்ளது என்பதை மறுக்க முடியாது. உதாரணமாக, இச 5-11 வரையுள்ள பிரிவுகள் உடன்படிக்கை ஆவணத்தின் தொடக்கவுரையாக உள்ளது. இச 12-26 வரையுள்ள பிரிவுகளில் காணப்படுகின்ற உடன்படிக்கை விதிகள் உடன்படிக்கை ஆவணத்தின் மையப்பகுதியாக உள்ளது. இந்த விதிகள் உடன்படிக்கையின் பங்காளிகளாக இஸ்ரயேல் மக்கள் பின்பற்ற வேண்டிய கடமைகளைத் தெளிவாகக் கூறுகின்றன.

இச 28 வது பிரிவு உடன்படிக்கை ஆவணத்தின் இறுதிக் கூறான ஆசிகள் மற்றும் சாபங்களை உள்ளடக்கியுள்ளது. ஆசிகளும் சாபங்களும் உடன்படிக்கை ஆவணங்களில் வருகின்ற வழக்கமான கூறுகள்தான். இச 28:1-15 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் இஸ்ரயேல் மக்கள் உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக, கடவுளின் கட்டளைகளைப் பின்பற்றி வாழ்ந்தால் அவர்களுக்குக் கிடைக்கும் ஆசிகளைப் பதிவு செய்கின்றன. இந்த ஆசிகள் இலக்கிய நயத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ளன. பொதுவாகக் கடவுளர்களைச் சாட்சியாகக் கொண்டு அவர்களின் பெயரால் உடன்படிக்கைகள் உறுதி செய்யப்படுகின்றன. எனவே ஆசிகளும் சாபங்களும்

கடவுள்களால் கொடுக்கப்படுவதாகக் கருதப்பட்டன. இஸ்ரயேலருக்கும் கடவுளுக்கும் இடையில் ஏற்பட்ட உடன்படிக்கையில் ஒரு முக்கியமான வித்தியாசம் உள்ளது. இந்த உடன்படிக்கையில் கடவுள் உடன்படிக்கையை உறுதி செய்பவராக அல்ல; அவர் ஒரு பங்காளியாக வருகின்றார் எனவே ஆசிகளையும் சாபங்களையும் அவரே நேரடியாகக் கூறுகின்றார். இணைச்சட்டம் நூலில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆசிகள் மற்றும் சாபங்கள் கி.மு. ஏழாவது நூற்றாண்டில் அசீரியர்கள் செய்த ஒப்பந்தங்களிலும் காணப்படுகின்றன.

ஆசிகள் வளமையை வாழ்க்கையில் கொண்டு வருகின்றன. கடவுளின் உடனிருப்பையும் அவரது பராமரிப்பையும் மக்களுக்கு வெளிப்படுத்துகின்றன. ஆசிகள் கடவுளின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிவதோடு தொடர்புடையவை. கடவுளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்பவர்கள் அவரது ஆசிகளை அனுபவிப்பார்கள். இணைச்சட்ட நூலில் நிலத்தின் செழுமையும், மனிதர்களின் பெருக்கமும் செடி கொடிகள், விலங்குகளின் வளர்ச்சியும் ஆசிகளாகக் கூறப்படுகின்றன. இச 28:7-14 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் ஒரு சில சிறப்பு ஆசிகளைக் கூறுகின்றன. உதாரணமாக, பகைவர்களின் மேல் வெற்றி, தக்க காலத்தில் மழை பெய்வித்தல் மற்றும் பூவுலக மக்கள் நடுவில் அவர்களைப் புகழ்பெறச் செய்தல் ஆகியவற்றைக் கூறலாம். இந்த ஆசிகள் அனைத்தும் உடன்படிக்கை விதிகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதால் மட்டுமே சாத்தியம்.

பண்டைய மேற்காசிய நாடுகளில் செய்யப்படுகின்ற உடன்படிக்கைகளில் ஆசிகளைவிட சாபங்களே அதிகமாக இருக்கும். இச 28 வது பிரிவிலும் ஆசிகளைவிட சாபங்களே அதிகமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இங்கே பதிவு செய்யப்பட்டுள்ள சாபங்களை வாசிக்கும்போது இணைச்சட்ட ஆசிரியர்களுக்கு கீழ்ப்படிதல் என்பது கடவுளின் அன்புக்குப் பதிலளிப்பது எனத் தெரிகிறது. கடவுளின் அன்பைக் கண்டுகொள்ளாமல், உடன்படிக்கைக்கு பிரமாணிக்கமாக இல்லாமல் வாழ்பவர்கள் எதிர்கொள்ள வேண்டிய ஒரு சில சாபங்களைப் பார்ப்போம். கொள்ளை நோய் ஒரு முக்கியமான சாபமாகக் கூறப்படுகிறது. உருக்குநோய், காய்ச்சல், கொப்புளம், எரிவெப்பம், வாள், இடி, நச்சுப்பனி ஆகியவற்றால் ஆண்டவர் உன்னை வதைப்பார். நீ அழியும்மட்டும் அவை உன்னை வாட்டும் (28:22) என ஆண்டவர் கூறுகிறார். இத்தகைய நோய்கள் தீய ஆவிகளினால் ஏற்படுகின்றன அல்லது கடவுளர்களுக்குப் பிடிக்காத சில செயல்களைச் செய்வதால் கோபங்கொண்ட கடவுளர்களால் அனுப்பப்படுகின்ற கொள்ளை நோய்கள் என பண்டைய மக்கள் நம்பினார்கள். இச 28:23-24 இல் உன் தலைக்கு மேலுள்ள வானம் வெண்கலமாகவும் உனக்குக் கீழேயுள்ள நிலம் இரும்பாகவும் இருக்கும். ஆண்டவர் புழுதியையும்

தூசியையும் உன் நாட்டின் மழையாகப் பொழியச் செய்வார். நீ அழியுமட்டும் அவைவானத்திலிருந்து உன் மேல் விழும் எனக் கூறப்படுகிறது. இந்தச் சாபம் மழை பொழியவேண்டிய காலங்களில் மழை பொழியாமல் பஞ்சம் ஏற்படுவதைக் குறிக்கிறது. இரும்பு நிலத்தில் வளமை இருக்காது. வெண்கல வானம் மழை அல்லது பனியை பெய்விக்காது. இச 28:25-29 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் பகைவர்களால் முறியடிக்கப்படுவதையும் பலவிதமான நோய்களால் பாதிக்கப்படுவதையும் கூறுகிறது. இச 28:27 இல் எகிப்தின் கொப்புளங்களாலும், மூல நோயாலும், சொறியினாலும், சிரங்கினாலும், ஆண்டவர் உன்னை வதைப்பார். அவற்றிலிருந்து நீ நலம் பெறமுடியாது எனக் கூறப்படுகிறது. இவை பலவிதமான தோல் நோய்களாக லேவியர் நூலில் கூறப்பட்டுள்ளன (லேவி 13:18-23). இவ்வகை நோய்களை வகை பிரித்துக் கூறுவதும் கடினம்; எனவே இவற்றை அடையாளங்களாகக் கருதலாம்.

இச 28:40 இல் ஒலிவ மரங்கள் உனக்குரிய நிலமெங்கும் இருக்கும்; ஆனால் நீ எண்ணெய் தேய்க்கமாட்டாய். ஏனெனில் உன் ஒலிவம் பிஞ்சுகள் உதிர்ந்துவிடும் என வாசிக்கிறோம். ஒலிவ மரங்கள் துளிர்விட்டு பூக்கும்போது பெரும்பாலான பூக்கள் உதிர்ந்துவிடும். குறைந்த அளவு பூக்கள்தான் மரத்தில் நிலைக்கும். மழையில்லாமல் நிலம் வறட்சியைச் சந்தித்தால் மீதமிருக்கும் பூக்களும் உதிர்ந்துவிடலாம். விளைச்சல் இல்லாமல் ஆகலாம். இச 28:42 இல் உன் மரங்கள் எல்லாவற்றையும், உன் நிலத்தின் பயனையும் வெட்டுக்கிளி உடைமையாக்கிக் கொள்ளும் என்கிறது. பண்டைய மேற்காசிய நாடுகளில் வெட்டுக்கிளிகள் பிரசித்தி பெற்றவை. வெட்டுக்கிளிகள் நிலத்தில் இறங்கினால் மிகுந்த அழிவைக் கொண்டுவரும். ஒரு வெட்டுக்கிளிக்கு ஒரு நாளைக்கு அதன் எடைக்குச் சமமான உணவு தேவை. வெட்டுக்கிளிகள் படையெடுக்கும்போது அவை பல மைல் தூரத்தை எளிதில் மூடிவிடும். இச 28:48 இல் பசியோடும், தாகத்தோடும், வெற்றுடம்போடும் யாதுமற்ற நிலையிலும் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்கெதிராக அனுப்பும் உன் பகைவர்களுக்கு நீ பணிவிடை செய்வாய். அவர்கள் உன்னை அழித்தொழிக்கும் மட்டும் இரும்பு நுகத்தடியை உன் கழுத்தில் வைப்பர் என வாசிக்கிறோம். நுகத்தடிகள் பொதுவாக மரத்தினால் செய்யப்படுகின்றன. இரும்பு நுகத்தடி வலுவான துன்பங்களைக் குறிக்கின்றன. பகைவர்களால் அடிமைப்படுத்தப்பட்டு நாடும் மக்களும் பாழாக்கப்படலாம்.

இச 28:51 இல் நீ அழிந்துபோகும்வரை அந்த இனம் உன் கால்நடைகளின் ஈற்றுகளையும் உன் நிலத்தின் பயனையும் உண்ணும். உன்னை அழிக்கும்வரை, உன் தானியத்தையும், இரசத்தையும், எண்ணெயையும், உன் மாடுகளின் கன்றுகளையும், உன் ஆடுகளின் குட்டிகளையும் அந்த இனம்

விட்டுவைக்காது எனக் கூறப்படுகிறது. இச்சொற்றொடரில் குறிப்பிடப்படுகின்ற தானியம், இரசம் மற்றும் எண்ணெய் ஆகியவைதான் மக்களுடைய முக்கியமான உணவுப் பொருள்கள். இங்கே குறிப்பிடப்படும் எண்ணெய் ஒலிவ எண்ணெய. இந்தக் குறிப்பு மிகவும்; முக்கியத்துவம் வாய்ந்தது. ஏனெனில் பாலஸ்தீனாவிற்கு அந்நியச் செலவாணியை ஈட்டித்தரும் ஒன்றாக ஒலிவ எண்ணெய் இருந்தது. பாலஸ்தீனாவின் அண்டை நாடுகளான எகிப்து மற்றும் மெசப்பெத்தோமியாவில் ஒலிவம் பயிரிடப்படுவதில்லை. எனவே அவர்களின் தேவைக்கான ஒலிவ எண்ணெயை பாலஸ்தீனாவிலிருந்து இறக்குமதி செய்தார்கள். இச 28:53 இல் உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுத்துள்ள உன் கருவின் கனிகளான உன் புதல்வர், புதல்வியரின் சதையைக்கூட உண்பாய் எனக் கூறப்படுகிறது. வரட்சி அதிகமான காலங்களில் இந்தகைய நிலை வரலாம். அல்லது பகைவர்களின் முற்றுகையால் உண்பதற்கு எதுவும் கிடைக்காத நிலையில் இப்படி நடக்கலாம். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை 2 அரசர் 6:28-29 இல் வாசிக்கிறோம். இப்பகுதியில் வருகின்ற சாபங்களில், குறிப்பாக 36-68 வரையுள்ள இறைச் சொற்றொடர்களில் பதிவுசெய்யப்பட்டுள்ள சாபங்கள், பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டவர்கள் எருசலேமுக்குத் திரும்பிய பின் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம் என பல அறிஞர்களும் கருதுகிறார்கள். இப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ள பல சாபங்கள் ஏற்கனவே இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் நடந்துவிட்டன. இவற்றைப் பதிவுசெய்கின்ற இணைச்சட்ட ஆசிரியர்களின் நோக்கமெல்லாம் இஸ்ரயேல் மக்கள் மீண்டும் தங்களைக் கடவுளுக்கு முழுமையாக அர்ப்பணிக்கவேண்டும் என்பதுதான். கீழ்ப்படிதல் உள்ளவர்களாக வாழ்வதில்தான் அவர்களின் எதிர்காலம் அடங்கியுள்ளது. கீழ்ப்படிதல் உள்ளவர்களாக வாழ்ந்தால் இஸ்ரயேல் மக்கள் கடவுளின் ஆசியை எதிர்பார்க்கலாம்; கீழ்ப்படிதல் இல்லாமல் வாழ்ந்தால் கடவுளின் தீர்ப்புதான் அவர்களுக்கு வந்துசேரும். இஸ்ரயேல் மக்கள் கடவுளின் கருணையால்தான் கடவுளின் மக்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இந்தத் தேர்வு அவர்களின் பிரமாணிக்கமின்மைக்கான தீர்ப்புகளை மாற்றாது. உடன்படிக்கை விதிகளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதில்தான் கடவுளோடு உள்ள உறவுக்குப் பிரமாணிக்கமாக இருப்பது அடங்கியிருக்கிறது. எண்ணிக்கையில் அதிகமாக சாபங்கள் இருப்பது இஸ்ரயேல் மக்கள் கடவுளுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதை வலியுறுத்துவதற்காக கையாளப்பட்ட ஒரு இலக்கியவடிவமாகவும் இருக்கலாம்.

இச 28:47-57 வரையுள்ள இறைச் சொற்றொடர்கள் கீழ்ப்படிதல் இல்லாத இஸ்ரயேலுக்கானச் சாபங்களாக உள்ளன. இந்தச் சொற்றொடர்கள் இஸ்ரயேலின்

கீழ்ப்படிதலின்மையை முன்கூட்டியே ஊகிக்கின்றன. உதாரணமாக, எல்லா நலன்களும் நிறைந்திருக்கையில் நீ உன் கடவுளாகிய ஆண்டவருக்கு மனமகிழ்வோடும் இதயக்களிப்போடும் ஊழியம் செய்யவில்லை (28:47) என்ற சொற்றொடரைக் கூறலாம். இப்பகுதி கி,மு. 597-587 காலத்தில் எருசலேமும் யூதாவின் ஏனைய நகரங்களும் முற்றுகையிடப்பட்ட சூழ்நிலையை படம்பிடித்துக் காட்டுவதாகக் கருதலாம். 53-57 வரையுள்ள இறைச்சொற்றொடர்கள் அந்த முற்றுகையுடன் தொடர்புடைய கொடூரமான நிகழ்வுகளை பிரதிபலிக்கின்றன. கீழ்ப்டிதலின்மைக்கான விளைவுகள் மிகவும் கொடூரமானவை. நோய், இறப்பு, பஞ்சம், வியாதிகள், குறைவான அறுவடை, நகரங்கள் முற்றுகை, நாடு கடத்தப்படுதல் மற்றும் பிறநாடுகளில் அடிமைகளாக வாழ்தல் போன்றவை சாபங்களாகக் கூறப்படுகின்றன. அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட கொடைதான் நாடு. கீழ்ப்படிதலின்மை கடவுளின் எல்லா நன்மை பயக்கும் செயல்களுக்கு எதிரான செயல்களைக் கொண்டுவருகின்றன. இஸ்ரயேல் மக்களுக்குக் கடவுள் செய்திருக்கும் நன்மைகள் ஏராளம்; நன்றியுணர்வு இல்லாத சில மனிதர்கள் அவற்றை ஒன்றும் இல்லாமல் ஆக்குகிறார்கள். மோசேயின் இந்த உரை இஸ்ரயேல் மக்கள் கடவுளுக்கு பிரமாணிக்கம் உள்ளவர்களாக வாழவேண்டும் என்ற அழைப்புடன் நிறைவுக்கு வருகிறது. இஸ்ரயேல் மக்கள் இதை மனதில் கொள்ள வேண்டும். கடவுளோடு உள்ள உறவுக்கு அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கடவுளோடு உள்ள உறவுதான் அவர்களின் வாழ்வையும் சாவையும் தீர்மானிக்கிறது.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf





அருட்பணி.ராபர்ட்
புனித.அடைக்கலமாதா ஆலயம்
மறவபட்டி
திண்டுக்கல் மறைமாவட்டம்

பொதுக்காலம்
5ம் வாரம்
04.02.2024

திருப்பலி வாசகங்கள்
யோபு 7/1-4, 6, 7
1கொரி 6/16-19, 22, 23
மாற்கு 1/29-39

# ஞாயிறு மறையுரை



## செபமே ஜெயம்

ஒரு சந்நியாசி குதிரையில் போய்க்கொண்டிருந்தார். விவசாயி ஒருவர் அந்தத் துறவியைப் பார்த்து உமக்கு என்ன கவலையில்லாத வாழ்க்கை! நானும் சந்நியாசியாகிவிட்டால் குதிரையில் சந்தோசமாகச் சவாரி செய்யலாம் இல்லையா? என்றார். நிச்சயமாக! ஆனால் சந்நியாசியாக இருப்பது அவ்வளவு எளிதல்ல என்றார். என்ன செபம் செய்வது அவ்வளவு கடினமா? என்று கேட்டார் விவசாயி. நிச்சயமாக ஐந்து நிமிடம் கண்களை மூடி எந்தவிதப் பராக்கும் இன்றித் தியானம் செய்! இந்தக் குதிரையை உனக்குக் கொடுத்து விடுகிறேன் என்றார் துறவி. விவசாயி கண்களை மூடித் தியானிக்கத் தொடங்கினார். இரண்டு நிமிடங்கள் கழிந்ததும் கண்ணைத் திறந்து திடீரென்றுகேட்டார். குதிரையும் அதன் மேல் உள்ள சேணத்தையும் கடிவாளத்தையும் சேர்த்துத்தானே?...... ஆம் செபம் செய்வது அவ்வளவு கடினமா? என்று கேட்ட விவசாயால் ஐந்து நிமிடம்கூடக் கண்களை மூடிச் செபிக்க முடியவில்லை.

அன்பார்ந்தவர்களே இன்றைய வாசகங்கள் நம்மைச் செபிக்க அழைக்கின்றது. செபிக்கும் முறையை பழக்கப்படுத்த அழைக்கின்றது. அதிகாலையில் எழுந்து செபிப்பது இயேசுக்குப் பழக்கமாக இருந்தது. அவர் சாதாரணமாகத் தனிமையானதோர் இடத்திற்குச் சென்று செபித்தார். அப்படி அவர் செபிக்கும்போது கடவுள் அவரோடு இருந்தார். அதனால்தான் இயேசுவை எந்த தீயசக்திகளும் நெருங்க முடியவில்லை! கிறிஸ்து பிறப்பதற்குமுன் தானியேல் என்னும் இளைஞனை சிங்கக் கூண்டுக்குள் போட்டார்கள். சிங்கம் எல்லாரையும் அடித்துச் சாப்பிட்டது. ஆனால் செபித்துக் கொண்டிருந்த தானியேலைமட்டும் சிங்கம் தொடவில்லை!


செபம் என்றால் என்ன?

கடவுளே என் அருகில் நீர் எப்போதும் இருக்க வேண்டும் - இதுதான் செபம். வாழ்வின் பல தருணங்களில் நாம் செபிக்க கூடியவர்களாக இருக்கின்றோம். காரணம் நம் வாழ்வு நல்ல வாழ்வாக, சமாதானம் மிக்கவாழ்வாக அமைய வேண்டும்

என்பதேயாகும். செபிக்கக்கூடிய மனிதன் செபவீரனாக மாறுகின்றான். செபிக்கக்கூடிய குடும்பம் கடவுளை உணரக்கூடிய குடும்பமாக மாறிப்போகிறது. அப்பேர்ப்பட்ட மனிதனை குடும்பத்தை இந்த உலகத் துன்பங்களிலிருந்து சோதனைகளிலிருந்து கடவுள் காப்பாற்றுவார். இது மிகவும் கொடுமையான உலகம்! இப்படிப்பட்ட உலகில் நாம் நலமுடன் வாழ செபிக்க வேண்டும்! கடவுளே என் பக்கத்தில் இரு! என்று காலையும் மதியமும் இரவும் செபிக்க வேண்டும்! செபிப்பவர்களின் அருகில் கடவுள் இருந்து அவனுக்கு ஏற்பட்ட இழப்பை அவன் அமைதியான உள்ளத்தோடு ஏற்றுக்கொள்ள அவனுக்கு மனபலத்தை அளிப்பார்!

இந்த உலகம் – அது வாழ்ந்தாலும் ஏசும் தாழ்ந்தாலும் ஏசும்! ஆனால் கடவுள் வாழ்ந்தாலும் நம் பக்கத்திலிருந்து நம்மை வாழவைப்பார். நாம் தாழ்ந்தாலும் நம் பக்கத்திலிருந்து நம்மை வாழவைப்பார். நம்முடைய வாழ்வில் அனைத்திற்கும் நேரம் ஒதுக்கின்றோம். அப்படியிருக்கும் போது செபத்திற்கென்று நேரத்தை ஒதுக்கி வைக்கவேண்டும். இறைவா என் பக்கத்திலிரு என்போம். பாதாளத்திலிருந்து கூவி அழைத்தாலும் நான் உன் பக்கத்திலிருப்பேன் என்று வாக்குறுதி அளித்திருக்கும் கடவுள் நாம் செபிக்கும்போது நம் பக்கத்திலிருந்து நம்மை எந்தத் துன்பமும் அணுகாமல் பாதுகாப்பார். ஆமென்,





# பொதுக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு

யோபு 7 : 1-4, 6-7

1கொரி. 9 : 16-19, 22-23, மாற். 1 : 29-39

**04-02-2024**

**திருப்பலி முன்னுரை**




**பா. சேவியர்**

திண்டுக்கல்


செபத்திலும் செயலிலும் கடவுளின் உடன் இருப்பை உணர்ந்து வாழ வரம் வேண்டி வருகை தந்துள்ள அன்பு இறை மக்களே, உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் ஐந்தாம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

காலம் நெசவாளனின் தறி நாடாவைவிட வேகமாக ஓடுகிறது. அத்தகையக் காலத்தோடு சேர்ந்து நாமும் ஓய்வின்றி ஓடிக் கொண்டே இருக்கிறோம். கண்ணீரும் கவலைகளும் தூங்கவிடாமல் செய்து விரக்தியை ஏற்படுத்துகிறது. இந்த விரக்தியை அப்படியே நம்பிக்கைத் துளிகளாக மாற்றி நம்மேல் பொழிந்து புத்துணர்ச்சியை ஊட்டுகிறது இன்றைய வார்த்தை வழிபாடு.

செபமும் செயலும் பிரிக்க முடியாத நாணயத்தின் இரண்டு பக்கங்கள். துன்பங்கள் துயரங்கள் தொடர்ந்தாலும் நம்பிக்கை இழக்காது இறைவனின் உடனிருப்பில் நிலைத்திருந்து செபிப்பவர்கள் வெற்றி பெறுகிறார்கள் என்ற சிந்தனையை நம் சிந்தையில் விதைக்கிறது இன்றைய வழிபாடு.

கடவுள் அன்பாய் இருக்கிறார் என்பதை உணர்ந்து, வாழக்கையில் வரும் துன்ப துயரங்களை இன்முகத்துடன் ஏற்று, அவரோடு இணைந்து அவரிலே வாழ்ந்திட வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

நம் வாழ்க்கையில் வரும் துன்பங்களிலிருந்து விடுதலை பெறும் முயற்சியைக் கற்றுத் தருகிறது நன்னெறி நூலான யோபு ஆகமம். நாம் அனைத்தையும் இழந்தாலும்கூட ஆண்டவரை இறுகப் பற்றிக் கொள்வோம், அவர் கொடுப்பார் என்ற நம்பிக்கையை வளர்த்துக்கொள்வோம் என்ற பாடத்தைத் துன்புறும் ஊழியனாகிய யோபு கற்றுத் தருவதைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நற்செய்தியைப் பறைசாற்ற வேண்டிய தம் கடமை பற்றியும், அதற்காக எதையும் செய்யத் தயாராய் இருக்கும் தன் அர்ப்பணிப்பு நிலை பற்றியும் இன்றைய இரண்டாம் வாசகத்தின் வழியே பவுலடியார் எடுத்துரைக்கிறார். நற்செய்தியைப் பறைசாற்றுவது ஒவ்வொரு கிறிஸ்துவனின் கடமை என்பதை வலியுறுத்தும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) நன்மை செய்பவரும் அன்பாய் இருப்பவருமான தந்தையே இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் எத்தகைய துன்பங்கள் சோதனைகள் வந்தாலும் இறை நம்பிக்கை குறையாமல், நற்செய்திப் பணியையும், மக்கள் நலப்பணியையும் இரண்டு கண்களாகக் கொண்டு செயல்படத் தேவையான வரங்களை அவர்கள் மேல் பொழிந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) எம் பிணிகளைத் தாங்கிக் கொண்டு, எம் துன்பங்களைச் சுமக்கும் அன்பு இறைவா, எங்கள் வாழ்வில் வரும் துன்ப துயரங்களையும், நோய் நொடிகளையும் மன உறுதியோடு எதிர்கொண்டு, செபத்தில் நிலைத்திருப்பதன் வழியாகவும், உமது உடனிருப்பை உணர்வதன் மூலமும் அவை அனைத்தையும் வென்று வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) எம்மை விட்டு விலகாதவரும், கை நெகிழாதவருமான அன்பு இறைவா, பசி, பட்டினி, நோய்கள், வேலையின்மை போன்றவற்றால் பாதிக்கப்பட்டு அவதியுறும் ஒவ்வொருவரையும் உம் கருணைக் கண்கொண்டு பாரும். அவர்களது வாழ்க்கை நிலை மாறி வளம் பெருகவும், உடல் நலம் பெற்று மகிழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) அருளும் தூய்மையும் நிறைந்த தந்தையே இறைவா, உம் திருமகன் இயேசுவை மீட்பராக ஏற்றுக் கொண்ட நாங்கள், உலகில் உள்ள மற்றவருக்கும் அவரது நற்செய்தியைக் கொண்டு செல்லும் கடமை உள்ளவர்கள் என்பதை உளமாற உணர்ந்து, கிறிஸ்துவை முழுமையாக அறிவிக்கவும், உமது ஆற்றலையும் இரக்கப் பெருக்கத்தையும் எல்லோருக்கும் பகிர்ந்திடவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

# ஞான வெளிச்சம் தரும் பொன் மொழிகள்



உணர்வுகளைத் தன் கட்டுப்பாட்டுக்குள் வைக்காதவருக்கு
எப்போதும் அடிமையின் நிலைதான்

யாரும் நமக்கு எஜமானர் இல்லை
எவரும் நமக்கு அடிமை இல்லை
எவரும் சமமானவர் இல்லை
நாம் அனைவரும் தன்னிகரற்றவர்

தகுதியற்றவைகள்தான் விலைமதிப்புள்ளதாய் தோன்றியது
என்பது வயது முதிர்ச்சியில்தான் தெரிகிறது

நமக்கான பாடங்களைக் கற்றுக்கொடுத்தபின்
துன்பங்கள் தானாக விலகிவிடுகின்றன– புரூஸ் லீ

அளவுக்கதிகமான சிற்றின்ப ஆசைகள்,
வாழ்வின் எளிய, சாதாரண பேரின்பங்களை
அனுபவிக்கும் தகுதியை இழக்க வைக்கின்றன. – லாவோ ட்சு

பிரச்னைகளை ஆராய்ந்தால், மேலும் மேலும் பிரச்னைகள் தோன்றும்.
தீர்வுகளுக்கான வழிகளை ஆராய்ந்தால், தீர்வுக்கான பல வழிகள் தோன்றும்

அகப்பட்டுக்கொள்ளத்தான இந்த மீன் அலைகிறது.
தொடமாட்டேன் என்று தூண்டில்கள் சொல்லிவிட்ட பிறகும். – மு.மேத்தா

இளமையில் நான் அறிவாளிகளை போற்றினேன்
வயது முதிர்ந்தபிறகு அன்பானவர்களை போற்றுகின்றேன்..
– ஆப்ரஹாம் ஹூசெல்

நல்உள்ளம் கொண்டிருப்பதற்காக வருந்த வேண்டாம்.
உங்களுக்கே அனைத்தும் நலமாகும், மேலும் வளமாகும்

அவமானம், தோல்வி, துரோகம், உதாசீனம், இழப்பு, நிராகரிப்பு
போன்ற எதனாலும் அசராத ஒரு மனிதனை வீழ்த்தக்கூடிய சக்தி
எதுவும் இல்லை.

# சங்க இலக்கியச் சுவை





திருமதி.லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

இன்று நன்னூல் – பாயிரம் இதன் தொகுப்பைக் காணலாம். நூலை புரிந்து கொள்ளவும் அதன் சிறப்பை உணர்ந்து விருப்பத்துடன் கற்கவும் பாயிரம் உதவுகிறது. அதாவது நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும், அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறைபற்றிப் பேசுவது பாயிரமாகும்.

தமிழில் முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் இத்தகைய அமைப்பு உண்டு. தொல்காப்பியத்தையும் அதன் உரைகளையும் பின்பற்றி எழுதப்பட்ட நூலான நன்னூலில் பொதுப்பாயிரம், சிறப்பாயிரம் ஆகியன குறித்து விளக்கப்பட்டுள்ளது. அவற்றுள் ஏழு நூற்பாக்களை இங்கு காணலாம்.

**பாடலின் தலைப்பு:**

பாயிரம் இல்லது அல்லது பனுவல் அன்றே.

**பாடல்:**

1.முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்,
2.பாயிரம் பொதுஇ சிறப்பு என இரு பாற்றே.
3.நூலே நுவல்வோன் நுவலும் திறனே
கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்
எல்லா நூற்கும் இவை பொதுப் பாயிரம்.
4.ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.
5.காலம் களனே காரணம் என்றுஇம் மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.
6. ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே.
7 மாடக்குச் சித்திரமும் மாநகருக்குக் கோபுரமும்
ஆடமைந்தோள் நல்லார்க்கு அணியும்போல் – நாடிமுன்
ஐந்துரையா நின்ற அணிந்துரையை என்நூற்கும் பெய்துரையா வைத்தார் பெரிது.
பவணந்தி முனிவர்.

**பாடலின் பொருள்:**

1. பாயிரத்திற்கு உரிய ஏழு பெயர்கள்:

அ) முகவுரை – நூலுக்கு முன் சொல்லப்படுவது.

ஆ)பதிகம் – ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பலவகைப் பொருள்களையும் தொகுத்துச் சொல்வது.

இ) அணிந்துரை

ஈ.)புனைந்துரை – நூலின் பெருமை முதலியவை விளங்க அலங்கரித்துச் சொல்வது

உ)நூன்முகம் – நூலுக்கு முகம் போல முற்பட்டிருப்பது.

ஊ)புறவுரை – நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றை நூலில் புறத்திலே சொல்வது.
ஏ)தந்துரை – நூலில் சொல்லிய பொருள் அல்லாதவற்றைத் தந்து சொல்வது.

2. பாயிரம் – பொதுப்பாயிரம்இ சிறப்பாயிரம் என இரு வகைப்படும்.

3.நூலின் இயல்பு, ஆசிரியர் இயல்பு, கற்பிக்கும் முறை, மாணவர் இயல்பு, கற்கும் முறை என்னும் ஐந்தையும் கூறுவது பொதுப் பாயிரம்.

4.சிறப்பு பாயிரத்தின்இலக்கணம்:
–நூலாசிரியரின் பெயர்
–நூல் பின்பற்றிய வழி
–நூல் வழங்கப்படுகின்ற நிலப்பரப்பு
– நூலின் பெயர்
–தொகை, வகை, விரி என்பவற்றுள் இன்னதில் இயற்றப்பட்டது என்னும் யாப்பு.
நூலில் குறிப்பிடப்படும் கருத்து, நூலை கேட்போர், (மாணவர்)
நூலைக் கற்பதனால் பெறுகின்ற பயன்
ஆகிய எட்டுச் செய்திகளையும் செம்மையாகத் தெரிவிப்பது சிறப்பாயிரத்தின் இலக்கணம் ஆகும். இப்பாடல் நூற்பா வகையைச் சார்ந்தது.

5. நூல் இயற்றப்பட்ட காலம், அது அரங்கேற்றப்பட்ட அவைக்களம், அது இயற்றப்பட்டதற்கான காரணம் என்னும் இம்மூன்றையும் மேலே குறிப்பிட்டுள்ள எட்டுச் செய்திகளுடன் சேர்த்து கூறுவோரும் உள்ளனர்.

6. ஆயிரம் முகத்தைப் பெற்றது போன்று பல்வேறு துறைச் செய்திகளை விரிவாகக் கூறினாலும் பாயிரம் இல்லையேல் அது சிறந்த நூலாக மதிக்கப்படாது.

7. மாடங்களுக்கு ஓவியங்களும் பெரிய நகரங்களுக்குக் கோபுரங்களும், அழகிய தோள்களைக் கொண்ட மகளிருக்கு அணிகலன்களும் அழகு எழிலைத் தரும். அவை போன்று எல்லா வகை நூல்களுக்கும் முன்னர் அழகு தருவதற்காக அணிந்துரையைப் புலவர்கள் பெருமையுடன் சேர்த்து வைத்தனர்.

நன்னூல், தொல்காப்பியத்தை முதல் நூலாகக் கொண்ட வழிநூல் ஆகும். இது பதிமூன்றாம் நூற்றாண்டில் பவணந்தி முனிவரால் எழுதப்பட்ட தமிழ் இலக்கண நூலாகும். இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் என இரண்டு அதிகாரங்களாக பகுக்கப்பட்டுள்ளது. சீயகங்கன் என்ற சிற்றரசர் கேட்டுக் கொண்டதால் பவணந்தி முனிவர் நன்னூலை இயற்றினார் எனப் பாயிரம் குறிப்பிடுகிறது.

நம் திருவிவிலியத்தில்,


பிள்ளாய், மேலும் ஓர் எச்சரிக்கை;
நூல்கள் பல எழுதுவதால் பயன் ஒன்றும் இல்லை.
மிகுதியான படிப்பு உடலுக்கு இளைப்பு .
சபை உரையாளர் 12 :12)

உங்கள் பெயர்கள் விண்ணகத்தில்
எழுதப்பட்டிருக்கின்றன
என்பது பற்றியே மகிழுங்கள் என்றார்
(இயேசு லூக்கா 10 : 20)

இயேசுவுக்கே மகிமை

லீமா விக்டோரியா

தமிழ் ஆசிரியை.



# விடியல்

3



திருமதி.ஜெயதங்கம்

அன்பர்களே, நீங்கள் துன்பத்தை தாங்குவதிலும் பொறுமையை கடைப்பிடிப்பதிலும் ஆண்டவரின் பெயரால் பேசிய இறைவாக்கினரை உங்களுக்கு மாதிரிகளாக கொள்ளுங்கள். தளரா மனமுடையோர் பேறுபெற்றோர் என்கிறோம். – யாக்கோபு(5: 10)

ஒளியின் மக்கள் இனங்களே!
நாம் இன்பத்தையும் மகிழ்ச்சியையும் அன்பையும் அமைதியையும் அருளையும் விரும்புகின்றோம். துன்பத்தை தாங்குவதிலும் பொறுமையை கடைப்பிடிப்பதிலும் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்றோம். மாற்றத்தை விரும்புகின்றவர்களின் மனங்கள் அமைதி நிலையில் ஆழ் சிந்தனையில் நல்லவற்றை பட்டியலிட்டு செயலில் ஈடுபட வீரியம் காட்டும்..

எந்த செயலும் செய்யாமல் பயனற்று கிடக்கும் மனிதர்கள் உயிரற்றவர்கள்.
–நேதாஜி.

இறைவன் நமக்கு அருளிய உயிர் என்ற மாபெரும் செல்வத்தைக் கொண்டு மண்ணுலகை மாற்றுவதற்கு வழி வகுக்கின்றோமா? நன்றி செலுத்துகின்றோமா? சிந்திப்போம்...

இறைவன் நமக்கு உயிர் எனும் பெரிய செல்வத்தை கொடுத்துள்ளார். அதை கொண்டு எதையும் சாதிக்கலாம்.
– நேதாஜி

இந்திய நாட்டின் தேச பிதாவாக கொண்டாடப்படுகின்ற ஒரு முக்கிய தலைவர் மகாத்மா காந்தியடிகள். இவர் மறைந்த தினம் ஜனவரி 30 அன்று தியாகிகள் தினமாக கொண்டாடப்படுகின்றது.. தென்னாப்பிரிக்காவில் வெற்றிகரமாக செய்து வந்த வழக்கறிஞர் தொழிலை விட்டுவிட்டு தாய்நாடு திரும்பி இந்தியர்கள் அனைவரும் அடிமை வாழ்வில் இருந்து மீள வேண்டும் என்பதற்காக ஆங்கிலேயர்களை எதிர்த்து பல அறப்போராட்டங்களை நடத்தி சிறைக்குச் சென்றார். சாதி, மதம் போன்ற பல்வேறு பிரிவினைகளில் சிதறி கடந்த மக்களை ஒன்று திரட்டி விடுதலை உணர்வை அனைவருக்கும் தர தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தார். ஆரம்ப காலத்தில் நமது இந்திய மக்கள், ஆங்கிலேயர்கள் தங்களை துப்பாக்கியால்

சுடுவார்கள். சிறையில் தள்ளி கொடுமைப்படுத்துவார்கள் என்று பயந்து அவர்களுக்கு அடிபணிந்து போக தயாராக இருந்தனர். இந்திய மக்களிடம் பயம் என்ற அரக்கன் மனதில் ஆட்கொண்டிருப்பதை மகாத்மா உணர்ந்தார். இதனால் மக்கள் ஒன்று சேராமல் இருந்தனர் என்பதை புரிந்து கொண்டு ஆங்கிலேயரின் துப்பாக்கியோ, நெருக்கடி மிகுந்த சிறையோ நம் போராட்ட குணத்தை ஒன்றும் செய்ய முடியாது என்று துணிந்து அகிம்சை வழியில் போராட மக்களை ஒன்று திரட்டினார். அவரைப் போல பல தலைவர்கள் இந்திய நாட்டின் விடுதலைக்காக தங்கள் உயிரையே அர்ப்பணித்து போராடிக் கொண்டிருந்தனர். நாட்டிற்காக போராடி சிறைக்கு செல்வது பெருமையான தருணம் என்பதை மக்களின் மனதில் ஆழப் பதித்தார். ஆங்கிலேயர்களின் சிறைச்சாலைகள் நாளுக்கு நாள் மக்கள் கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. ஒரு கட்டத்தில் கட்டுப்படுத்த முடியாமல் இங்கிலாந்து அரசாங்கம் தடுமாறியது..

எண்ணற்ற தியாகிகள் உருவாகினர் தங்கள் விலை மதிப்புமிக்க உடைமைகள், உதிரங்கள், உறவுகள் என யாவற்றையும் தியாகம் செய்து தேசப்பற்று என்ற உணர்வை கருவில் உள்ள குழந்தைக்கும் விதைத்தனர்... ஒன்றுபட்டனர்... அறவழியில் தொடர்ந்து போராடினர்... சுதந்திரத்தை உரிமையாக்கிக் கொண்டனர்.

நமக்கு என்று ஓர் அரசியல் நிர்ணய சபை உருவாகியது. டாக்டர்.ராஜேந்திர பிரசாத் அதன் தலைவராக இருந்தார் 299 பேர் மொத்த உறுப்பினர்களாக இருந்தனர். மூன்று ஆண்டுகள் 11 மாதம் 18 நாட்கள் இதை உருவாக்க எடுத்துக் கொண்டனர். நமக்கென்று அரசியல் சாசனங்கள் உருவாக்கினார். அரசியல் அமைப்புச் சட்டம் பல அடிப்படை உரிமைகளை நமக்கு வழங்கியது.

1.சமத்துவ உரிமை
2.சுதந்திர் உரிமை
3.சுரண்டலுக்கு எதிரான உரிமை
4.சமூக சுதந்திர உரிமை
5.கல்வி மற்றும் கலாச்சார உரிமை
6.அரசு அமைப்பு சார்புகள் உரிமை

ஆகியவை நமக்கு வழங்கின. மக்களை மக்களே ஆளக்கூடிய மக்களாட்சி மண்ணில் மலர்ந்தது..

இன்றைய காலகட்டங்களில் இந்த சுதந்திரமும் இத்தனை உரிமைகளும் நம்முடைய இளைஞர்களுக்கு எத்தகைய மாற்றத்தை தற்கால வாழ்வு நிகழ்த்தியுள்ளது?

நம் தேசத்தில் ஒரு பக்கம் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. மறுபக்கம் எழுபது வயதுக்கு மேல் உள்ள முதியவர்களின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது. அறிவு இஅனுபவம் இரண்டும் அதிகமாக உள்ளது.

அனுபவம் அறிவை வழி நடத்துகின்றதா?

இயற்கையை நேசிப்பது, சட்ட திட்டங்களை மதிப்பது, சாலை விதிகளை மதித்து பயணம் செல்வது, எண்ணற்ற போதைப்பொருள்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கு

அடிமையாகாமல் இருப்பது, நவீன சாதனங்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவது, மண்ணை மீட்டெடுப்பது, மனங்களை செம்மைப்படுத்துவது என எண்ணில் அடங்காத செயல்களில் நம் இளையோரை நல்வழிப்படுத்த, அவர்களின் பாதையில் சென்று அவர்களை வனைத்து எடுக்க, முதுமை என்ற அனுபவ பொக்கிஷம் முடங்கிப் போகாமல் முழுமூச்சில் செயல்படுகிறதா? மனிதர்களின் திறமை அனைத்தும் மண்ணில் வெளிப்பட சமூகத்திற்கு பயன்பட உதவி செய்கின்றதா? இம்மண்ணுலகில் யாரும் யாருக்கும் மேலானவரும் இல்லை கீழானவரும் இல்லை என்கின்ற எண்ணங்களை நம் மனதில் விதைப்போம்..

மனித உள்ளத்தில் மறைந்திருக்கும் பண்புகளாகிய பணிவும் அமைதியுமே உங்களுக்கு அழியாத அலங்காரமாய் இருக்கட்டும். கடவுள் பார்வையில் அதுவே விலை உயர்ந்தது. (1பேதுரு 3:4)

ஆம் இனியவர்களே! பணிவு, அமைதி என்ற விலை உயர்ந்த வை நமக்கு அலங்காரமாக இருக்கட்டும். நம்மை புரிந்து கொள்ள வேண்டும் என்ற எண்ணங்களை விடுத்து, நாம் மற்றவரை புரிந்து கொண்டு அவரை ஆற்றப்படுத்த, விடுதலை என்ற உணர்வை உள்ளத்தில் ஊட்டி மகிழ்ச்சியுடன் மானுட சமுதாயத்தில் மாற்றங்கள் பல விதைத்திட ஒவ்வொருவரும் விடியலை போல் எழுவோம்...

உள்ளம் என்னும் கலங்கரை தீபத்தில் விடியல் மீண்டும் துயில் களையும்...





# திருக்குறளின் தேனமுதம்



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm

## குறள் 81

இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மைசெய்தற் பொருட்டு

## குறள் விளக்கம்

வீட்டில் இருந்துபொருள்களைக் காத்து இல்வாழ்க்கைநடத்துவதெல்லாம் விருந்தினரைபோற்றிஉதவிசெய்யும் பொருட்டேஆகும்

## சிந்தனை

டால்ஸ்டாய் கதைகளில் ஒன்று இது. இன்று உனது வீட்டிற்கு வருவேன் என்று கனவில் சொன்ன கடவுளிடம் இரவில் முறையிடுவான் பக்தன், நீர் ஏன் என் வீட்டிற்கு வரவில்லை என்று. இறைவன் சொல்லுவார்: மூன்றுமுறை வந்தேன். வழிப்போக்கனாக, முதியவனாக, நோயாளியாக. ஆனால் நீதான் என்னை இனம் கண்டுகொள்ளவில்லைஎன்றுசொல்லுவார்.

இல்வாழ்க்கையில் ஒருவன் பொருட்களை சேர்த்து பாதுகாத்து இருக்கிறான் என்றால் அவன் தன் இல்லம் வருகின்ற அனைத்து விருந்தினர்களையும் உபசரிப்பதற்காகத்தான். இவ்வாறுதான் இல்வாழ்க்கை வாழவேண்டும் என்று வள்ளுவர் குறிப்பிடுகின்றார். ஏனென்றால் நமது வீட்டிற்கு வருகின்ற விருந்தினர் உறவினராகமட்டும் இருக்கமுடியாது. அவர் கடவுளாகக்கூட இருக்கலாம். எனவே வருகின்றவர்களுக்கு உதவிசெய்ய வேண்டும். உன்னிடம் கேட்கின்றவர்களுக்கு மறுக்காதே என்கிறார்.

வேதாகமத்தில் தொடக்க நூல் 18ம் அதிகாரத்தில்,ஆபிரகாமிடம் மூன்று மனிதர்கள் வருகின்றார்கள். மூவரையும் நன்றாக உபசரிக்கின்றார். அவர்களோ நாங்கள் மீண்டும் வருகின்றபொழுது சாராள் குழந்தையோடு இருப்பாள் என ஆசீர்வதித்து செல்கின்றனர்.

அந்நியரானாலும் சரியாராக இருந்தாலும் சரி நாம் உபசரித்து மகிழ்ச்சியோடு அவர்களை அனுப்பினோம் என்றால் இறைஆசீரை நாம் பெற்றுக் கொள்வோம்.